'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




### தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு இருக்கான்னு மக்களுக்குச் சந்தேகம்!

# தினம் தினம் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு!

சென்னை, மே 31-

தமிழ்நாட்டில் தினம் தினம் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன, இங்கே சட்டம் ஒழுங்கு இருக்கா இல்லையான்னு மக்களுக்கு சந்தேகம் வருது என்று குற்றம்சாட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ட்விட்டர் பதிவு வருமாறு:

**கடலூரில் 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியை எற்படுத்துகிறது.**

**இப்படி தொடர்ச்சியா நடக்குற குற்றச்சம்பவங்களை பார்க்கும் போது, தமிழ்நாட்டுல சட்டம் ஒழுங்குன்ற ஒன்னு இருக்கா இல்லையான்னு மக்களுக்கு சந்தேகம் வருது.**



**இந்த** Sofa Model **அரசு அமைஞ்சது முதல், கொலை – கொள்ளை – பாலியல் வன்கொடுமைன்னு இப்படி குற்றங்கள் நடக்காத நாளே இல்ல.**

**தேர்தல் பிரச்சாரத்துல பக்கம் பக்கமா பேப்பர் வச்சு, சட்டம் ஒழுங்கு பத்தி வாய்கிழிய** Punch **டயலாக் பேசினவர், முதலமைச்சர் ஆனதும்** Deep Sleep Mode**–க்கு போய்ட்டாரு.**

**பெண்கள் பாதுகாப்புக்காக நீங்க அறிவிச்சசிங்கப்பெண்கள்படையோட தொடக்க விழாவை, கடைசி நேரத்துல ரத்து செஞ்சு இருக்கீங்க.**

**நிகழ்ச்சியை தள்ளி வைச்சு இருக்கீங்களா, இல்ல அந்த முயற்சியையே தள்ளிவச்சுட்டீங்களானு மக்கள் கேட்கிறாங்க.**

**சிங்கப்பெண் படைனு பேரையும்,** Uniform**–ஐயும் மாத்துறது தான் மாற்றமா? இல்ல, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேணுமா?**

**நீங்க டைம் எடுத்து கத்துக்கிட்டு வந்து சட்டம் ஒழுங்கை காப்பாத்துற வரை தமிழ்நாடு தாங்காது** CM Sir.

இவ்வாறு தனது ட்விட்டர் பதிவில் எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு முன்னிலை!

# பாளையங்கோட்டை தொகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி !

## மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தெருத் தெருவாகச் சென்று தெரிவித்தார் !

நெல்லை, மே 31-

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளராக போட்டியிட்டு 13,805 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. பாளையங்கோட்டை தொகுதிக்குட்பட்ட வார்டுகளுக்கு தெருத் தெருவாகச் சென்று வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நெல்லை மாநகராட்சி மேயர். கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு பங்கேற்றனர்.

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பாளையங்கோட்டை தொகுதி மக்களுக்கு,பகுதி வாரியாகச் சென்று நன்றி தெரிவித்து வருகின்றார்.

அதன் தொடர்ச்சியாக பாளை பேருந்து நிலையம் அருகிலிருந்து துவங்கி, வார்டு. 32,வார்டு.33,வார்டு. 34,வார்டு. 35, வார்டு. 36, வார்டு. 39,வார்டு. 55, வார்டு.38, வார்டு.37ஆகிய பகுதிகளில், வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்வில் திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், மாநகர துணைச் செயலாளர் பிரபு பாண்டியன், மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி, பாளை மண்டல சேர்மன் பிரான்சிஸ், மாவட்ட பிரதி வல்லநாடு முத்து, பாளை பகுதி துணைச் செயலாளர் முகமது கமாலுதீன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலன் என்ற ராஜா, வட்ட செயலாளர்கள் சதீஷ்குமார், தளவாய், அருள் இளங்கோ,பேபி கோபால், ஜெயின் உசேன், ஆவின் கல்யாணசுந்தரம், பால மகேஷ்,அக்பர் ஷெரிப், மாமன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள், சின்னதாய் கிருஷ்ணன், உள்பட கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை ஒன்றியத்தில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு கிராமம், கிராமமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், க.சௌந்தரராசன், மெய்யூர் சந்திரன், த.ரமணன், எம்.ஜி.சுப்பிரமணி உட்பட பலர் உள்ளனர்.


